People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 01.11.2009 முதல் 14.11.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 1.11.09 | **மதுரை மாவட்டம்:** விஸ்வநாதபுரத்தைச் சேர்ந்தவர் உமா(28), இவரும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவரும் சேர்ந்து சேலைகளுக்கு எம்பிராய்டரி செய்யும் தொழில் செய்து வருகின்றனர். இவர் தனது தொழிலை மேம்படுத்த சுந்தராஜபுரத்தைச் சேர்ந்த ஒச்சாயி என்பவர் மூலம் தெற்கு வெளிவீதியை சேர்ந்த பசும்பொன் என்பவரிடம் 5 லட்சம் வாங்கினார் அப்பணத்தை கடனுக்கு ஒரு மாதத்திற்கு 11/2 லட்சம் வட்டி கேட்டு கொலை மிரட்டல் விடுத்தாக போலீஸ் துணை கமிஷ்னரிடம் புகார். | கந்து வட்டி | தினத்தந்தி |
| 1. | 2.11.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஷ்வரம் கோயில் சுவாமி சன்னதி அருகே யாரோ ஒரு தாய் பிறந்து 25 நாள் ஆண் குழந்தையை பையில் போட்டு விட்டு சென்றுள்ளார். இக்குழந்தையை கோயில் ஊழியர் மகாலட்சுமி மகள் பேபி தானே வளர்ப்பதாக வாங்கி சென்றார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 2. | 2.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அடுத்துள்ள மீனம்பட்டி திடீர் நகரைச் சேர்ந்தவர் வெள்ளை சாமி (38), சண்முகதாய் (33), இவரது பக்கத்து விட்டுகாரர் அழகுராஜா (39) மீனம்பட்டியில் விறகுகடை வைத்திருக்கிறார். இவரது மனைவி மல்லிகா இவர்களது குடும்ப தகராறில் வெள்ளைசாமி மற்றும் சண்முதாய் சண்டை விலகிவிட்டனர். இந்த ஆத்திரத்தில் அலகுராஜா, வெள்ளைசாமி, மற்றும் சண்முகதாய், இருவரை கத்தியால் குத்தினார், இது குறித்து சிவகாசி கிழக்கு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 3. | 4.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கோடாங்கி நாயக்கன்பட்டி ஊராட்சி தலைவர் முகம்மது சித்திக், ஜமாத் தலைவராக மூகமத ரபீக் உள்ளர். இருவருக்கும் நீண்ட நாட்களாக பிரச்சனை இந்நிலையில் முகமது சித்திக்ராய் ஜசாபீவி இறந்தார். இவர் ஜமாத்திற்கு வரி கட்டாததால் உடலை அடக்கம் செய்ய தடை செய்தார். இதனால் இரு தரப்பினரிடையே தகாரறு ஏற்பட்டது. இதனை டி.எஸ்.பி., தாசில்தார் சுனேகன், ஆகியோர் மூலம் பேச்சுவார்த்தை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. | கோஷ்டி மோதல் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | 4.11.09 | **நெல்லை மாவட்டம்:** வள்ளியூரைச் சேர்ந்த ராஜன் ராதாபுரம் அருகேயுள்ள உயத்துரை சேர்ந்த முத்துசாமி மற்றும் இருவர் சேர்ந்து தமிழகத்தில் உள்ள பல காப்பகங்கள் மற்றும் பல இடங்களில் குழந்தை திருடி குழந்தை இல்லாத தம்பதிகளிடம் விற்று வந்தனர். இவர்களை காவலர்கள் கைது செய்து இவர்கள் மூலம் 15 குழந்தைகளை மீட்டனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 5. | 4.11.09 | **திருச்சி மாவட்டம்:** திருவெம்பூர் மேலகுமரேசபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஞான அருள்ராஜ் இவரது மகள் சத்யா(17), இவருக்கும் குமரதிஸ்வரனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. குமரதீஸ்வரனுக்கும் அதே பகுதியைச் சேர்ந்த ராஜகுமாரிக்கும் கள்ளத் தொடர்பு இருந்தது. குமரதீஸ்வரனுக்கு திருமணம் செய்தால் தங்களது உறவு தடைபடும் என்ற எண்ணத்தில் ராஜகுமாரி தனது தோழிகளான சரஸ்வதி, கண்மணி, தனியார் மருத்துவமனையில் நர்சாக வேலை செய்தவரிடம் எய்ட்ஸ் ஊசி பெற்றுக் கொண்டு சத்யாவை கொலை செய்ய முயன்றார். இது குறித்து திருவெறும்பூர் போலீஸில் புகார். | -------- | தினகரன் |
| 6. | 4.11.09 | **கடலூர் மாவட்டம்:** திருப்பாபுலியூர் அருகே உள்ள சாத்தங்குப்பத்தை சேர்ந்த கைதி வெங்கடேசன் இவர் கடலூர் மத்திய சிறை அறையில் இருந்து காலை கடன்களை கழிப்பதற்காக வெளியே அனுப்பபட்ட நேரத்தில் அங்குள்ள மரத்தில் போர்வையால் தூக்கில் தொங்கி தற்கொலை முயற்சி செய்தார். அங்குள்ள காவலர்கள் காப்பாற்றினர். | காவல் நிலைய வன்முறை | மாலைமலர் |
| 7. | 4.11.09 | **மதுரை மாவட்டம்:** திருநகர் அருகே திருவள்ளுவர் காலனி பகுதியைச் சேர்ந்த கணேசமூர்த்தி இவரது மனைவி இந்திரா இவர்களுக்கு 2 பெண் குழந்தைகள். கணேசமூர்த்தி அடிக்கடி குடித்துவிட்டு மனைவிடையே தகராறு செய்து வந்தார். இதனால் மனம்முடைந்த இந்திரா, மண்ணெண்ணெயை ஊற்றி தற்கொலை செய்தார் இவரை தடுக்க சென்ற கணேசமூர்த்தி பலத்த காயம் அடைந்தார், இது குறித்து திருநகர் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 8. | 4.11.09 | **மதுரை மாவட்டம்:** கீரைத்துறை பகுதியில் உள்ள இருதுமால் நதி ஓடையில் தண்ணீரில் மிதந்த சிசு உடலை கீரைத்துறை போலீஸார் மீட்டுள்ளனர். இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 9. | 4.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே உள்ள பந்தல்குடியைச் சேர்ந்தவர் தலீத் | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்தவர் சரவணன் இவர் இப்பகுதியில் உள்ள கடையில் குடிப்பதற்கு தண்ணீர் பாக்கெட் வாங்கி குடித்துவிட்டு சாலையில் போட்டுள்ளார். கீழே விழுந்த அந்த தண்ணீர் சிதறி அக்கிராமத்தைச் சேர்ந்த ஆதிக்க சாதியினர் மீது தெறித்தது. இதனால் ஆத்திரம் அவர் சரவணனை தாக்கினார். இது குறித்து காவல்துறை நடவடிக்கை எடுக்ககோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்பாட்டம் நடத்தினார். | | |
| **10.** | 5.11.09 | **திருப்பூர் மாவட்டம்:** உடுமலை அருகே உள்ள மடத்துக்குளம் தேவேந்திரர் வீதியில் வசிப்பவர் அம்மாபட்டியான் மகன் பத்ரகாளி, பழனி அருகேயுள்ள சண்முகநதி பகுதியைச் சேர்ந்தவர் சீனிவாசன் மகள் ஸ்ரீபிரியா(21), இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டனர். இதற்கு ஸ்ரீபிரியா வீட்டில் கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில் ஸ்ரீபிரியாவின் தந்தை சீனிவாசன், அண்ணன் ராஜீ, மற்றும் ஒருவர் சேர்ந்து ஸ்ரீபிரியாவை கத்தியால் குத்தி கொலை செய்தனர். இது குறித்து உடுமலை டி.எஸ்.பி.ராஜா வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றார். | தலித் எதிரான வன்முறை | தினமலர் |
| **11.** | 5.11.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் மேலராமன் புதூர் தேவலாயத்தில் வெளிப்புறம் நிக்கேல் அதிதூதர் சிலையை அதே பகுதியில் சுற்றி திரிந்த வாலிபர் கல்வீசி உடைத்தார். இது குறித்து நேசமணி நகர் போலீஸில் புகார். | வன்முறை | தமிழ் முரசு |
| **12.** | 5.11.09 | **சேலம் மாவட்டம்:** இடைபாடி அருகே அரியராகவுண்டன் வலவை சேர்ந்தவர் சிவமணி கட்டிட தொழிலாளி இவரது மனைவி இந்துமதி இவர்களுக்கு 3 குழந்தைகள் சிவமணி தினமும் குடித்து இந்துமதியை துன்புறுத்தியதால் இந்துமதி தானும் தற்கொலை செய்து, 3 குழந்தைகளுக்கும் விஷம் கொடுத்து கொலை செய்தார். இது குறித்து காவலர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| **13.** | 5.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரையை அடுத்த பெருங்குடியைச் சேர்ந்தவர் மலைசாமி விவசாயி இவரது மகள் பிச்சைகனி, 10ம் வகுப்பு படித்து வருகிறார். இவரை அதே பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் ஈவ் டீசிங் செய்ததாக பெருங்குடி காவல் நிலையத்தில் புகார். | ஈவ் டிசிங் | மாலை மலர் |
| **14.** | 5.11.09 | **கோவை மாவட்டம்:** கோவை அருகே உள்ள துடியலூர் கவுண்டம் பாளையம் இடையே பாளையம் ரோட்டில் தனியார் பள்ளிக்கூடம் படிக்கும் மாணவன், கிருஷ்ணகுமார், முகமது மார்க்கானி, ஆகிய மாணவர்களை பள்ளி | பள்ளி வன்முறை | மாலை மலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | உடற்பயிற்சி ஆசிரியர் சசிகுமார் மதிய உணவு இடைவேளையில் பேசியதை கண்டித்து மற்றும் டிபன் பாக்ஸ்ால் மாணவர்களை அடித்தார், அதில் மூன்று மாணவர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இதனால் மாணவர்களின், பெற்றோர் பள்ளியை முற்றுகையிட்டனர். | | |
| 15. | 5.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே பாலநத்தம் கிராமம். இங்கு தேசிய ஊரக வேலை உறுதி திட்டப்பணியாக பணியாற்றி வந்த பஞ்சவர்ணம் என்பவரின் 11/2 வயது குழந்தையை தேள் கடித்தது. அருகில் முதலுதவி பெட்டி இல்லாததைக் கண்டித்து 400க்கும் மேற்பட்ட பெண்கள் பஞ்சாயத்து அலுவலகத்தை முற்றுகையிட்டனர். | அரசு தன் கடமை செய்யாமை | தீக்கதிர் |
| 16. | 5.11.09 | **தஞ்சை மாவட்டம்:** பூதலூர் ஒன்றிய ஒரத்தூர் கிராமத்தில் அரசு கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகள் மிகவும் பழுதடைந்து எந்த நேரமும் இடிந்து விழும் நிலையில் உள்ளது இதனை மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க கோரி மனு அளித்தனர். | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 17. | 6.11.09 | **மதுரை மாவட்டம்:** அழகர் கோவில் அருகே உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் கல்வி கட்டண உயர்வைக் கண்டித்து மாணவர்கள் மறியல் செய்தனர். மறியலில் ஈடுபட்ட மாணவர்களின் மீது காவலர்கள் தடியடி நடத்தினர். | காவல்நிலைய வன்முறை | தினகரன் |
| 18. | 6.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** திருவில்லிபுத்தூர் குலாலர் தெருவைச் சேர்ந்தவர் ராஜி இவரது மனைவி தீபா(28). ராஜி, தீபாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவியை தீ வைத்து தானும் தீக்குளித்து இறந்தார். இது குறித்து திருவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 19. | 7.11.09 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புவனம் அருகே அதிகரையைச் சேர்ந்தவர் ரவி, இவரது மனைவி இருளாயி(35), இவரை மர்ம நபர்கள் தூக்கி சென்று பாலியல் பாலாத்காரம் செய்து கொலை செய்துள்ளனர். இது குறித்து திருப்புவனம் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 20. | 7.11.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** பூதப்பாண்டியை அடுத்த கேசவன் புதூரைச் சேர்ந்தவர் பத்மநாபன் இவரது மகள் பத்மா மகேஸ்வரி, இவருக்கும் வடசேரியில் காய்கறி வியாபரம் செய்யும் வாலிபர் ஒருவருக்கும் காதல் ஏற்பட்டது. சுமார் 6 வருடங்களாக காதலித்து வந்ததாகவும் தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி தன் காதலன் ஏமாற்றியதாக காதலன் வீட்டுமுன் தர்ணா போராட்டம் நடத்தினார். இந்நிலையில் கோட்டாட்சியர், மற்றும் போலீஸார், பேச்சுவார்த்தை நடத்தி | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருகின்றனர். | | |
| 21. | 7.11.09 | **மதுரை மாவட்டம்:** உத்தப்பநாயக்கனூர் போலீஸ் சரகம் பொய்யாண்டம்பட்டியைச் சேர்ந்தவர் அம்சுராஜ், ராணுவவீரர் அவரது மனைவி துர்க்காதேவி, அம்சுராஜ் தன் மனைவியின் நடத்தையில் சந்தேகபட்டு அவரை கொலை செய்தார். இது குறித்து உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து அம்சுராஜ் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் கோர்ட் அம்சுராஜ்வுக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்தது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை முரசு |
| 22. | 8.11.09 | **சென்னை மாவட்டம்:** குழந்தைகளை வைத்து பாலியல் சம்பந்தமான படங்களைத் தயாரித்து அதனை குறுந்தகடுகளாக வடிவமைத்து இளையதளம் மூலம் பரப்பிய நெதர்லாந்தைச் சேர்ந்த வில்லியம்ஸ்சை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் சுற்றி வளைத்து கைது செய்து கோர்ட்டில் ஆஜர் படுத்தினார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 23. | 8.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் அருகே உள்ள மேட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மகாலட்சுமி, இவருக்கும் சென்னை திருவான்மியூரைச் சேர்ந்த மளிகை கடை வியாபாரி ராமசந்திரன், என்பவருக்கும் கடந்த ஆண்டு திருமணம் நடந்தது. திருமணம் நடந்த சில மாதங்களாக இவரது கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக சாத்தூர் மாஜிஸ்திரேட்டு கோட்டில் மனு கொடுத்தார். அதன் பெயரில் கணவர் உள்பட 5 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்துமாறு கோர்ட் உத்தரவு விட்டது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 24. | 8.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே வன்னியம்பட்டியைச் சேர்ந்தவர் சபீஷ்(38), இவருக்கும் அலங்காநல்லுரைச் சேர்ந்த சாந்திக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது 30 பவுண் நகையும், 30 ஆயிரம் ரொக்கமும் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் சபீஷ் தன் மனைவியிடம் மேலும் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 25. | 8.11.09 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் போலீஸ் சரகம் குட்டி மேக்கிப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன்(37), இவருடைய மனைவி இடையப்பட்டியைச் சேர்ந்த அன்னக்கொடி, மற்றும் அவருடைய சகோதரர்கள் சௌந்தராஜ் முனியாண்டி ஆகியோர் தனது மனைவியை காரில் கடத்தி சென்றதாக அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | 8.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜீவாநகர் பகுதியைச் சேர்ந்த சந்திரசேகரன் மனைவி பஞ்சவர்ணம் இவர்களுக்கு மகன், மகள் உள்ளனர் கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சவர்ணத்தின் மகனுக்கு கண் அறுவை சிகிச்சை நடைபெற்றது மேலும் 4 மாதங்களுக்கு முன்பு மீண்டும் பார்வை மங்கிவிட்டதாக மகன் கூறினார். அதில் மனமுடைந்த தாய் தீக்குறித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்த ஜெய்ஹிந்தபுரம் காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை முரசு |
| 27. | 8.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே கீழவளவு பக்கமுள்ள கோட்டநத்தம்பட்டியைச் சேர்ந்தவர் செல்வராஜ் இவரது மனைவி நாச்சி(23), இவருக்கு திருமணமாகி சில நாட்களில் செல்வராஜ் துபாய்க்கு வேலைக்கு சென்றுவிட்டார். நாச்சி ஊரில் வசித்து வந்தார். இந்த நிலையில் நாச்சி நடத்தையில் உறவினர்கள் சிலர் சந்தேகப்பட்டதால் இவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 28. | 9.11.09 | **மதுரை மாவட்டம்:** ஆரப்பாளையம் பஸ் நிலைய பகுதியில் உள்ள பொது கழிப்பறையில் 30 வயது மதிக்கத்தக்க பெண் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கரிமேடு காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 29. | 9.11.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே கல்லுக்கு பகுதியைச் சேர்ந்தவர் நிர்மலா(22), திருமணமாகி குழந்தை இல்லை. நிர்மலா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து உத்தப்பநாயக்கனூர் போலீசார் விசாரிக்கின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 30. | 9.11.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** கோட்டைப்பட்டினம் சேர்ந்த மீனவர்களின் விசைப்படகுகள், வலைகளை சேதப்படுத்தியும் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர், துப்பாக்கி சூடு நடத்தினர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 31. | 9.11.09 | **திருப்பூர் மாவட்டம்:** உடுமலை அருகே மடத்துக்குளம் தலீத் இளைஞர் பத்ரகாளி இவர் பழனி சண்முகாநதி பகுதியில் வசித்து வந்த சீனிவாசன் மகள் ஸ்ரீபிரியாவை(21), காதலித்து திருமணம் செய்து கொண்டார். தனது மகள் தலீத் இளைஞரை திருமணம் செய்த ஆத்திரத்தில் சீனிவாசன் மற்றும் இரண்டு பேர் சேர்ந்து ஸ்ரீபிரியாவை கத்தியால் குத்தி கொலை செய்தார். இது குறித்து உடுமலை டி.எஸ்.பி. ராஜா தலைமையில் வழக்கு பதிவு செய்து குற்றவாளியை கைது செய்தார். | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 32. | 11.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே உள்ள பாண்டிகோவில் பகுதியைச் சேர்ந்தவர் | பெண்களுக்கு எதிரான | மாலை மலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடராஜன் மகள் உமாமகேஸ்வரி(21), இவருக்கும் மல்தான்பட்டியைச் சேர்ந்த மலைச்சாமி மகன் பால்ராஜுக்கும் கடந்த ஆண்டு திருமணம் நடந்தது. பால்ராஜ் திருமணமான சில நாட்களிலிருந்து தன் மனைவியை அடித்த துன்புறுத்தியதாக கருப்பாயூரணி காவல் நிலையத்தில் புகார். | வன்முறை | |
| 33. | 11.11.09 | **மதுரை மாவட்டம்:** செல்லூரைச் சேர்ந்தவர் கிருஷ்ணகுமார்(35), இவர் சென்னை உயர்நீதிமன்றம் கம்யூட்டர் பிரிவில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி அலமேலு(எ)சங்கீதா கூடுதல் வரதட்சனை கேட்டு கணவர் கிருஷ்ணகுமார், மற்றும் அவரது தயார் கொடுமை படுத்துவதாக மதுரை கோர்ட்டில் மனு. அம்மனுவின் அடிபடையில் தல்லாக்குளம் மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரிக்குமாறு கோர்ட் தீர்ப்பு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 34. | 11.11.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கீழக்கரை அருகே பனையடியேந்தலை சேர்ந்த சண்முகராஜீக்கும் சண்முகதாய்க்கும் ஏழு ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது சண்முகதாய்க்கு கள்ளக்காதல் இருப்பதாக கூறி அவருடன் சண்முகராஜ் அடிக்கடி சண்டைபோட்டுள்ளார். சம்பவத்தன்று ஆத்திரத்தில் சண்முகராஜ், சண்முகத்தாயை கட்டையால் அடித்ததில் சண்முகதாய் இறந்தார். இது குறித்து ஏர்வாடி போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 35. | 12.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் என்.எஸ் நகரைச் சேர்ந்த குருபாலன்(15), மாயமானர் இவரது தாயார் ஜோதி தாடி கொம்பு போலீஸில் புகார் செய்தனர். இவ்வழக்கை பதிவு செய்யாமல் கால தாமதம் செய்த எஸ்.ஐ.அரங்கநாயகியை டி.ஐ.ஜி.சஸ்பெண்ட செய்தார். | காவல் நிலைய வன்முறை | தமிழ்முரசு |
| 36. | 12.11.09 | **கரூர் மாவட்டம்:** பசுவதிபாளையம் முத்துநகரைச் சேர்ந்தவர் வீரமணி இவரது மகள் ஷாமிலிதேவி(19), கரூரை அடுத்த தான்தோனி மலையில் உள்ள அரசு கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இவரை அதே கல்லூரியில் படிக்கும் யுவராஜ் மற்றும் ரகுராம் இருவரும் ஷாமிலிதேவியை காரில் கடத்தி பாலியல் பலாத்காரம் செய்ததாக. இது குறித்து பசுபதிபாளையம் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 37. | 12.11.09 | **மதுரை மாவட்டம்:** கரும்பாளையைச் சேர்ந்தவர் சபரிகிரிசன்(21), அதே பகுதியைச் சேர்ந்தவர் கலா(21). சபரிகிரிசன் திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி கலாவை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாலியல் பலாத்கரம் செய்ததாக தல்லாக்குளம் போலிஸில் புகார். | | |
| 38. | 13.11.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** வ.உ.சி தெருவைச் சேர்ந்தவர் கண்ணன் இவரது மகள் தமிழரசி(24), இவரை சானாத்தெருவைச் சேர்ந்த கணேசன் என்பவர் கடத்தி சென்றதாக இராமநாதபுரம் பஜார் போலீஸ் ஸ்டேசனில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 39. | 13.11.09 | **மதுரை மாவட்டம்:** ஊமச்சிகுளம் பகுதியில் பள்ளி மாணவிகளை ஈவ்டீசிங் செய்த போலீஸ் செய்யது அபுதாகிர் உள்பட 3 பேரை சமயநல்லூர் காவலர்கள் கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 40. | 13.11.09 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான்அருகே உள்ள திருவேங்கடத்தைச் சேர்ந்தவர் காசிமாரி இவரது மனைவி சாரதாதேவி இவரை கிரேஸ்மாரி மற்றும் 4பேர் கடத்தி சென்றதாக கூடல் நகர் காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 41. | 13.11.09 | **மதுரை மாவட்டம்:** கேரள அருகே உள்ள மூலவட்டம் பகுதியைச் சேர்ந்தவர் ரஜினி(27), மதுரை தெற்குதெருவைச் சேர்ந்த பார்கவி இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இந்நிலையில் ரஜினி மற்றும் அவரது குடும்பத்தினார் கூடுதல் வரதட்சனை கேட்டதாக மேலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 42. | 13.11.09 | **கோவை மாவட்டம்:** கோவை கருமத்தம் பட்டி அருகே சோளக்காட்டுப்பாளையம் தங்கவேலு என்னும் தலீத் அருந்ததியா சமுகத்தைச் சேர்ந்தவரின் மகள் ஜெயப்பிரியா இவர் கல்வி கடன் வேண்டி கருமத்துப்பட்டி இந்தியன் ஒவர்சீஸ் வங்கியில் கேட்ட போது தலீத் என்ற காரணத்தால் அவ்வங்கியில் கடன் தரமறுக்கின்றனர். என்று கோவை மாவட்ட ஆட்சியரிடம் புகார். | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 43. | 13.11.09 | **ஈரோடு மாவட்டம்:** கோபி.டி.என் பாளையத்தில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரியில் ஆட்டோமொபைல் 2 ம் ஆண்டு படித்த மாணவன் அஜித்குமரை, அங்குள்ள சினியர் மாணவர்கள் ராகிங் செய்ததால் கல்லூரி நிர்வாகத்தில் புகார் கொடுத்தார். நடவடிக்கை எடுக்காததால் இது குறித்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கால் செய்தார், போலீஸ் நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவு. | ராகிங் | தினகரன் |
| 44. | 14.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் அதிக கட்டணம் வசூலிப்பதாக கூறி மாணவ–மாணவிகள் ஊர்வலமாக சென்ற கலெக்டரிடம் மனு கொடுத்தபோது, போலீஸார் அனுமதி | காவல் நிலைய வன்முறை | மாலை மலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்காததால் அவர்களை கலைந்து செல்லும்படி கூறியும் கலைந்து செல்லாமல் ஊர்வலம் செல்லமுயன்றனர். இதனால் போலீஸ் தடியடி நடந்தது. இதை கண்டித்து போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க கோரி மாணவர்கள் தடையை மீறி ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 20 பேரை போலீஸார் கைது செய்தனர். | | |
| 45. | 14.11.09 | **விழுப்புரம் மாவட்டம்:** கள்ளக்குறிச்சி அருகே உள்ள பங்காரம் கிராமத்தைச் சேர்ந்தவர் சிவபாலன் பொதுபாதை அமைப்பது தொடர்பாக சிவபாலன் கள்ளக்குறிச்சி தாசில்தார் அன்பரசனிடம் அனுகியபோது அன்பரசன் 25 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தமிழ்சுடர் |
| 46. | 14.11.09 | **கன்னியகுமரி மாவட்டம்:** குமரி மாவட்டத்தில் மீன் பிடிக்க சென்ற மாயமான மீனவர்களை மீட்க கோரி ஆட்சியாளரிடம் புகார். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 47. | 14.11.09 | **தேனி மாவட்டம்:** கோம்பை காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்து சென்ற தலித் இளைஞர் கோவிந்தராஜ் காவல் நிலையத்தில் அடித்து துன்புறுத்தப்பட்டார். க.விலக்க மருத்துவமனையில் இறந்தார். | காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்